பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 193 நாள் : 29.10.2024

**பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடக் கழிவுகளை ஒவ்வொரு மண்டலத்திலும் நிர்ணயிக்கப்பட்டுள்ள இடத்தில் மட்டுமே கொட்டிட வேண்டும்.**

**விதிமீறல்களில் ஈடுபடுபவர்கள் மீது அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்படும்.**

**மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

பெருநகர சென்னை மாநகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகள் சட்டவிரோதமாக பொது இடங்களில் கொட்டப்படுவதை தவிர்க்கும் பொருட்டு, கட்டட கட்டுமானம் மற்றும் இடிபாட்டுக் கழிவுகளை சேகரித்து கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள் / தனிநபர்கள் / தனியார் நிறுவனங்கள் பெருநகர சென்னை மாநராட்சியின் அங்கீகாரத்திற்குட்பட்டு அத்தகைய கழிவுகளை பெருநகர சென்னை மாநகராட்சியால் இதற்கென்று பிரத்யேகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் எந்தவிதமான கட்டணமின்றி இலவசமாக கொட்டுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மண்டலத்திலும் கீழே குறிப்பிட்டுள்ள 15 இடங்கள் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

| வ. எண். | வார்டு | மண்டலம் | இடம் | ஒருங்கிணைப்பு புள்ளிகள் (Co-Ordinates) | |
|---|---|---|---|---|---|
| 1 | 7 | 1 | பக்கிங்ஹாம் கால்வாய் சாலை, சாத்தாங்காடு, திருவொற்றியூர் (மண்டலம்-1 லாரி நிலையம் அருகில்) | 13° 9'15.65"N | 80°17'8.28"E |
| 2 | 21 | 2 | காமராஜர் சாலை, மணலி (மண்டல அலுவலகம்-2 அருகில்) | 13° 9'42.90"N | 80°16'1.56"E |
| 3 | 26 | 3 | CMDA டிரக் முனையம், இரவு காப்பகம் அருகில் (மாதவரம் பேருந்து நிலையம் பின்புறம்) | 13° 8'51.15"N | 80°13'28.38"E |
| 4 | 37 | 4 | வடக்கு அவென்யூ சாலை, மகாகவி பாரதி நகர், வியாசர்பாடி | 13° 7'36.12"N | 80°15'45.37"E |
| 5 | 58 | 5 | பழைய கால்நடை கிடங்கின் ஒரு பகுதி, அவதானம் பாப்பையா சாலை, சூலை | 13° 05'26.1"N | 80°15'53.8"E |
| 6 | 70 | 6 | | | |

| வ. எண். | வார்டு | மண்டலம் | இடம் | ஒருங்கிணைப்பு புள்ளிகள் (Co-Ordinates) | |
|---|---|---|---|---|---|
| | | | (சென்னை மாநகராட்சி பள்ளி எதிரில்) | | |
| 7 | 86 | 7 | மாணிக்கம் பிள்ளை தெரு, அம்பத்தூர் (CMWSSB OHT அருகில்) | 13° 6’4.79"N | 80°10’19.23"E |
| 8 | 101 | 8 | செனாய் நகர் முதல் பிரதான சாலை (கஜலட்சுமி காலனி அருகில்) | 13° 4’42.82"N | 80°13’23.15"E |
| 9 | 120 | 9 | லாயட்ஸ் காலனி (சென்னை மாநகராட்சி ITI அருகில்) | 13°3’0.69"N | 80°16’21.64"E |
| 10 | 127 | 10 | குருசிவா தெரு, எஸ்.எம்.பிளாக், ஜாபர்கான்பேட்டை, கோடம்பாக்கம் (R-10 எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையம் அருகில்) | 13°03’70.06"N | 80°20’16.21"E |
| 11 | 155 | 11 | நடராஜன் சாலை மற்றும் பாரதி சாலை சந்திப்பு (ராமாபுரம் ஏரி அருகில்) | 13° 1’54.86"N | 80°10’58.42"E |
| 12 | 158 | 12 | நந்தம்பாக்கம் குப்பை மாற்று வளாகம், அடையாறு நதிக்கரை அருகில் | 13°02’20646"N | 80°188’128"E |
| 13 | 174 | 13 | வேளச்சேரி பிரதான சாலை, குருநானக் கல்லூரி மற்றும் வேளச்சேரி மயான பூமி அருகில் | 12°59’23.14"N | 80°13’19.24"E |
| 14 | 186 | 14 | 200 அடி ரேடியல் சாலை, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகம் | 12°95’00.92"N | 80°22’86.30"E |
| 15 | 197 | 15 | கங்கையம்மன் கோவில் தெரு விரிவாக்கம், காரப்பாக்கம் (தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அருகில்) | 12°54’58.33"N | 80°14’11.03"E |

இதுகுறித்து பலமுறை அறிவிப்புகள் வெளியிடப்பட்டும், பெரும்பாலான பயன்பாட்டாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட கட்டுமான கழிவு சேகரிப்பாளர்களாக பதிவு செய்யவில்லை என்பது அறியப்படுகிறது. மேலும், இவ்வசதிகள் பிரதியேகமாக கட்டுமானம் மற்றும் இடிபாட்டு கழிவுகளை கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள தனியார் லாரி உரிமையாளர்கள் / தனி நபர்கள் / தனியார் நிறுவனங்கள் இலவசமாக பயன்பெறும் வகையில் ஏற்படுத்தப்பட்டுள்ளதால், பயன்பாட்டாளர்கள் இவ்வசதிகளை பயன்படுத்திக் கொள்ளுமாறும் மற்றும் சாலை ஓரங்கள், காலிமனைகள், நீர்நிலைகள் மற்றும் ஆற்றங்கரை ஓரங்கள் போன்ற பொது இடங்களில் கட்டிடக் கழிவுகளை கொட்டுவதை தவிர்த்திடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இதுகுறித்து மேலும் விவரங்களுக்கு / சந்தேகங்களுக்கு / இணையதளத்தில் தெரிவித்துள்ள மண்டலம்-1 முதல் 15 வரையில் உள்ள உதவி செயற்பொறியாளர் (திடக்கழிவு மேலாண்மை) அல்லது எங்களது 24 மணிநேரம் இயங்கக் கூடிய தகவல் உதவி மையத்தை 1913 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு, எங்களது பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களின் வழிகாட்டுதல்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சாலை ஓரங்கள், காலிமனைகள், நீர்நிலைகள் மற்றும் ஆற்றங்கரை ஓரங்கள் போன்ற பொது இடங்களில் சட்டவிரோதமாக கட்டடக் கழிவுகள் / குப்பைகளை கொட்டுவது மற்றும் கழிவுநீர்/கசடுகளை நீர்நிலைகள்/பொது இடங்களில் விடுவது ஆகிய விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது அபராதம் விதிக்கப்படும். இதுபோன்ற விதிமீறல்களை பொதுமக்கள் கண்டறிந்தால், அவர்களும் 1913 என்ற எண்ணில் புகார் அளிப்பதன்மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தகுந்த நடவடிக்கை எடுக்கும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**